முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

# 51 - நாடகமும் அரங்கியலும்

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

# 51 - நாடகமும் அரங்கியலும்

## புள்ளியிடும் திட்டம்

## நாடகமும் அரங்கியலும் பாடநெறியானது

வினாப்பத்திரம் I, வினாப்பத்திரம் II என இரு பத்திரங்களை உள்ளடக்கியது. பகுதி I இல் 40 வினாக்களையும் பகுதி II இல் 07 வினாக்களையும் கொண்டுள்ளது.

பகுதி I இன் 40 வினாக்களும் கட்டாய வினாக்களாகும். சரியான விடையை இனம் கண்டு விடைத்தாளில் இதற்குரிய கூட்டில் புள்ளடி இடுதலாகும்.

வினாப்பத்திரம் I

பகுதி - I 40 வினாக்களுக்கு $40 \times 1 = 40$ புள்ளிகள்

பகுதி - II 07 வினாக்களையுடையது.

இவ் வினாத்தாளில் 07 வினாக்களில் முதலாம் வினா கட்டாயமானது. ஏனையவற்றுள் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

$05 \times 12 = 60$ புள்ளிகள்

வினாப்பத்திரம் I, II

பகுதி - I 40 புள்ளிகள்

பகுதி - II 60 புள்ளிகள்

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2022 (2023)

### விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர்கள் ஊதா நிறக் குமிழ் முனை பேனாவினை விடைத்தாள்களை புள்ளியிடுவதற்குப் பயன்படுத்தவும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரீட்சகரினால் புள்ளிகள் பிழையற்றது என உறுதிப்படுத்த நீலநிற அல்லது கருப்புநிறப் பேனாவினை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**




(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

### பல்தேர்வு விடைத்தாள்

01 துளைத்தாள் தயாரித்தல்

i. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.

ii. அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.

iii. துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.

iv. சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.

v. **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை X அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிட்டு பிழையிடவும் புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் ஒவ்வொரு விடைக்கும் வழங்கப்பட்டுள்ள புள்ளிகளின் தொகையினை ஒவ்வொரு பக்கமாக கூட்டவும் அக்கூட்டுத்தொகை உங்களால் முன்பக்கத்தில் மொத்தம் எனக் குறிப்பிட்ட மொத்தப்புள்ளிகளுக்கு சமமானதா? என பரீட்சிக்கவும்

✶ புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

i. ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.
ii. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.
iii. வினாப்பத்திரம் I இற்கான புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**
iv. வினாப்பத்திரம் II இற்கான புள்ளி பட்டியலிலை தயார் செய்யும் போது பகுதிப்புள்ளிகளை பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப்புள்ளியை புள்ளிப்பட்டியலின் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும்.
v. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**
vi. 21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப் புள்ளிகளை உள்ளடக்கி அவ்வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கியக் குறிப்பு :**

i. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் வினாப்பத்திரம் I, II மற்றும் III என்ற புள்ளி பட்டியலின் உரிய நிரலில் நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது **தசம தானங்களில் அல்லது பின்னத்தில் பதியப்படலாகாது.**

ii. புள்ளி பட்டியலில் சகல பக்கங்களிலும் புள்ளிகளை பதிந்த உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்பார்த்த உதவி பரீட்சகர், புள்ளிகளை பரீட்சிக்கும் எண்கணித பரீட்சகர் (EMF) மற்றும் பிரதம பரீட்சகர் ஆகியோர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**51 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)
**General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)**

නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) I, II
நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I, II
Drama and Theatre (Tamil) I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I

அறிவுறுத்தல்கள் :

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

1. ஆற்றுவோரும் பார்ப்போரும் உணர்வுரீதியாக ஒன்றிக்கும் கலைவடிவமாக அமைவது
   (1) சிற்பம் (2) ஓவியம் (3) நாடகம் (4) கைவினை

2. சைக்ளோராமா எனப்படும் விண்திரையைக் கொண்ட அரங்கு
   (1) வட்டக்களரி (2) படச்சட்டம் (3) களத்துமேடு (4) தானயம்பல

3. குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'ஆரொடு நோகேன்' எனும் நாடகம் ஒரு
   (1) கூத்துருவ நாடகம் ஆகும். (2) இசை நாடகம் ஆகும்.
   (3) சிறுவர் நாடகம் ஆகும். (4) பாடசாலை நாடகம் ஆகும்.

4. பின்வருவனவற்றுள் சிங்களச் சமூகத்தினிடையே நிகழ்த்தப்பெறும் நாட்டார் ஆற்றுகை வடிவமாகக் கொள்ளத்தக்கது
   (1) சொக்கறி (2) பாஸ்க்கா (3) நட்டயக்கும (4) சன்னியகும

5. 'சின்னச் சின்ன குருவிகள்' எனும் பாடல் இடம்பெற்ற நாடகம்
   (1) கூடி விளையாடு பாப்பா (2) வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள்
   (3) பஞ்சவர்ண நரியார் (4) தப்பி வந்த தாடி ஆடு

6. பின்வருவனவற்றுள் வடமோடிக் கூத்துக்களை மட்டும் உள்ளடக்கிய தொகுதியாக அமைவது
   (1) தர்மபுத்திரன், கர்ணன் போர், இராம நாடகம்
   (2) தேவசகாயம்பிள்ளை, சங்கிலியன், தர்மபுத்திரன்
   (3) பப்பிரவாகன், அலங்காரரூபன், அனிருத்திரன்
   (4) வாலிவதை, நொண்டி நாடகம், எஸ்தாக்கியார்

7. மேல்வருவோருள் ஈழத்துத் தமிழ் அரங்கப்போக்கில் அரங்கினூடே ஜனநாயக அரசியலைத் தேடியவர்
   (1) கலையரசு சொர்ணலிங்கம் (2) பாலேந்திரா
   (3) க.சிதம்பரநாதன் (4) திரவியம் இராமச்சந்திரன்

8. பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் நாடகங்களுள் தழுவல் நாடகமாகக் கருதப்படுவது
   (1) பொருளோ பொருள் (2) துரோகிகள் (3) சங்கிலி (4) மாணிக்கமாலை

9. ஊமைச் சித்திரிப்பில் ஈடுபடும் நடிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளவேண்டிய பயிற்சியாக அமைவது
   (1) பேச்சுப் பயிற்சி (2) உடற்தளர்வுப் பயிற்சி
   (3) வாசிப்புப் பயிற்சி (4) குரற் பயிற்சி

**10.** பேராசிரியர் சு.வித்தியானந்தனால் புத்தாக்கம் செய்யப்பட்ட கூத்துக்களுள் வடமோடி **அல்லாதது**
(1) கர்ணன் போர் (2) நொண்டி நாடகம் (3) இராவணேசன் (4) வாலிவதை

**11.** ஒயிலாட்டம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் **பொருத்தமற்றது**
(1) கிராமிய மெட்டாகிய தெம்மாங்கில் பாடல்கள் பாடப்படுவது
(2) வேளாண்மைத் தொழில் சிறக்க வேண்டி ஆடப்படுவது
(3) பேயோட்டுதலை நோக்காகக் கொண்டிருப்பது
(4) காலில் மணிச்சலங்கை அணிந்து ஆடப்படுவது

**12.** எந்தையும் தாயும் நாடகம் முதன்முதலில் அரங்கேற்றப்பட்ட அரங்காக அமைவது
(1) நாற்சார் வீடு (2) வட்டக்களரி (3) படச்சட்டமேடை (4) திறந்தவெளி

**13.** பின்வருவனவற்றுள் பாடல்வழி அரங்க மரபைச் சார்ந்தது
(1) காத்தவராயன் (2) பூதத்தம்பி (3) இராவணேசன் (4) சங்காரம்

**14.** மனிதமாடு, தோணி ஆகிய சிறுகதைகளை எழுதியோர் முறையே
(1) அ.செ.முருகானந்தன், வ.அ.இராசரத்தினம் (2) வ.அ.இராசரத்தினம், சண்முகநாதன்
(3) வ.அ.இராசரத்தினம், அ.செ.முருகானந்தன் (4) சாண், அ.செ.முருகானந்தன்

**15.** 'மொட்டைத் தலையுடன் ஒற்றைப் பிராமணன் முன்னிதோ வாறானே...' எனும் இசை நாடகப் பாடலில் மேலோங்கி நிற்கும் உணர்வு
(1) மகிழ்ச்சி (2) சோகம் (3) வீரம் (4) சாந்தம்

**16.** கரையோரப் பிரதேச மக்களின் வாழ்வியலை பா நாடக வடிவில் வெளிப்படுத்தும் நாடகமாக அமைவது
(1) புதியதொரு வீடு (2) கோடை (3) எந்தையும் தாயும் (4) ஆரோடு நோகேன்

**17.** பாத்திரத்தின் தொழில், சமூக அந்தஸ்து மற்றும் பழக்கவழக்கங்கள் தொடர்பான அம்சங்கள் பாத்திரத்தின் எத்தகைய பண்பாகக் கருதப்படும்?
(1) பௌதிகப் பண்பு (2) உளவியற் பண்பு (3) சமூகவியற் பண்பு (4) தோற்றப் பண்பு

**18.** மாரியம்மன் வழிபாட்டோடு தொடர்புடையதும் சிந்துநடைக் கூத்து என அழைக்கப்படுவதுமான கூத்து
(1) காத்தவராயன் கூத்து (2) காமன் கூத்து
(3) கோவலன் கூத்து (4) வசந்தன் கூத்து

**19.** 'என்னடி உந்தன் கோப்பியில் ஒரு சிறு...' எனும் பாடல் இடம்பெற்ற நாடகம் மற்றும் நாடகாசிரியர் பெயர் முறையே
(1) பொய்க்கால், இ.முருகையன் (2) உயிர்த்த மனிதர் கூத்து, இ.முருகையன்
(3) சக்தி பிறக்குது, சி.மௌனகுரு (4) சரிபாதி, சி.மௌனகுரு

**20.** கூத்தினை நெறிப்படுத்துபவர் எவ்வாறு அழைக்கப்படுவார்?
(1) கொப்பி பார்ப்பவர் (2) கட்டியகாரன் (3) சபையோர் (4) அண்ணாவியார்

**21.** அரங்கப் பின்னணி உட்பட மேடைவெளி முழுவதையும் ஒளியூட்டுவதற்குப் பொருத்தமான ஒளி
(1) பொட்டொளி (2) பரப்பொளி (3) கீற்றொளி (4) இலக்கு ஒளி

**22.** தனது சாரீர வளம், இசைஞானம், நடிப்புத்திறன் என்பவற்றால் இசைநாடகக் கலைஞருக்குரிய முன்மாதிரியாகத் திகழ்ந்த ஈழத்து இசைநாடகக் கலைஞர்
(1) நடிகமணி V.V.வைரமுத்து (2) சுந்தராம்பாள்
(3) S.G.கிட்டப்பா (4) சங்கரதாஸ் சுவாமிகள்

**23.** படச்சட்ட அரங்கின் பிறப்பிடமாகக் கருதப்படுவது
(1) இலங்கை (2) இந்தியா (3) இத்தாலி (4) இந்தோனேசியா

**24.** நடிப்பாற்றலை விருத்தி செய்வதற்குத் துணைபுரியும் அரங்க விளையாட்டுக்கள் தொடர்பான பொருத்தமற்ற கூற்று
(1) படைப்பாக்கத் திறனை விருத்தி செய்யவல்லது.
(2) கூட்டாக இணைந்து செயற்படத் தூண்டுவது.
(3) தீர்மானம் எடுக்கும் ஆற்றலை வளர்த்துக்கொள்வது.
(4) முரண்பாடுகளைத் தோற்றுவிக்கவல்லது.

**25.** கேட்போரின் மனவெளியில் காட்சி விரியும் பண்பு கொண்ட படைப்பாகக் கருதப்படுவது
(1) தொலைக்காட்சி நாடகம் (2) வானொலி நாடகம்
(3) பலே (4) சினிமா

**26.** நாடகத்தில் நெறியாளர் என்பவர்
(1) பாத்திரத்திற்கான ஒப்பனையை மேற்கொள்பவர்
(2) மேடைக் காட்சிகளை முகாமை செய்பவர்
(3) நாடக ஆற்றுகையை வடிவமைத்து நெறிப்படுத்துபவர்
(4) இசைக்கப்பெறும் வாத்தியங்களை நெறிப்படுத்துபவர்

**27.** நாடக ஆற்றுகை ஒன்றினை தாக்கவன்மையாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் கேட்பிய மூலகங்களாவன
(1) ஒலியும் ஒளியும் (2) ஒளியும் இசையும்
(3) காட்சியும் ஒளியும் (4) இசையும் ஒலியும்

**28.** நடிகரின் உணர்ச்சி வெளிப்பாட்டுடன் தொடர்புடைய அபிநயமாக விளங்குவது
(1) சாத்விகம் (2) ஆஹார்யம் (3) வார்ச்சிகம் (4) ஆங்கிகம்

**29.** நல்லதொரு நாடக விமர்சகர் எப்பொழுதும்
(1) நிறைகளை மட்டும் கூறவேண்டும்.
(2) குறைகளை மட்டும் கூறவேண்டும்.
(3) தான் நினைத்ததனை மட்டும் கூறவேண்டும்.
(4) குறைநிறைகளை ஆராய்ந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கூற வேண்டும்.

• மேல்வரும் உரையாடற் பகுதியை அடிப்படையாகக் கொண்டு 30 முதல் 31 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

A – நெடுந்தூரம் நீண்ட நாள் ஓடி நினைவெல்லாம் நீயாக மீண்டேன். இதுவோ விளைய இருந்ததம்மா
B – என்னுடைய பிள்ளை
A – எவன் பிள்ளை
C – என் குழந்தை

**30.** மேற்படி உரையாடற் பகுதி இடம்பெற்ற நாடகத்தின் பெயர்
(1) எந்தையும் தாயும் (2) புதியதொரு வீடு
(3) ஆரொடு நோகேன் (4) கோடை

**31.** மேற்படி உரையாடலுடன் தொடர்புபட்ட பாத்திரங்கள் A, B, C முறையே
(1) மாயன், மாசிலன், மயிலி
(2) மாசிலன், மாயன், மயிலி
(3) மாசிலன், மயிலி, மாயன்
(4) மாயன், மயிலி, மாசிலன்

**32.** 'ஆரொடு நோகேன்' நாடகத்தின் பேசுபொருள்
(1) பால்நிலை சமத்துவம் தொடர்பானது.
(2) சிறுவர் உரிமை தொடர்பானது.
(3) ஒடுக்கப்பட்ட சமுதாயத்துடன் தொடர்புடையது.
(4) கட்டிளமைப் பருவத்தினருடன் தொடர்புடையது.

**33.** வாசிப்பு அரங்கில் ஈடுபடும் ஒருவர் கவனம் செலுத்தவேண்டிய விடயமாகக் கருதப்படத்தக்கது
(1) உடலசைவுகளுக்கு முக்கியத்துவமளித்து வாசித்தல்.
(2) மெய்யசைவுகளுக்கு அழுத்தம் கொடுக்காது குரலைப் பயன்படுத்தி ஏற்ற இறக்கங்களுடன் வாசித்தல்.
(3) மெய்நிலைகளுக்கு அதிகளவு முக்கியத்துவமளித்து வாசித்தல்.
(4) நால்வகைச் சித்தரிப்புகளிலும் கவனம் செலுத்தி வாசித்தல்.

**34.** பின்வரும் இராகங்களுள் அதிகாலை வேளையைப் புலப்படுத்துவதற்குப் பொருத்தமானதாகக் கருதத்தக்கது
(1) நீலாம்பரி (2) சஹானா (3) பூபாளம் (4) முகாரி

**35.** ஒப்பனையை மேற்கொள்ளும்போது உடலில் ஒட்டுவதற்கு உகந்ததாகக் கொள்ளத்தக்கது
(1) ஸ்பிரிட்கம் (2) பைண்டர்கம் (3) சுப்பர்குளு (4) மல்டிபொண்ட்

**36.** நடிகர், நெறியாளர், ஒப்பனையாளர் ஆகிய பன்முக ஆளுமை கொண்ட படத்தில் காட்டப்பட்ட அரங்கவியலாளர்



(1) குழந்தை ம.சண்முகலிங்கம்
(2) அ.தாசீசியஸ்
(3) கலையரசு சொர்ணலிங்கம்
(4) நா.சுந்தரலிங்கம்

**37.** படத்தில் காட்டப்பட்டுள்ள காட்சி விதானிப்பு எவ்வகையான நாடகங்களுக்குப் பொருத்தப்பாடுடையதாய் அமையலாம்?




(1) மோடிமை நாடகம்
(2) கூத்து
(3) யதார்த்த நாடகம்
(4) சிறுவர் நாடகம்

**38.** படத்திற் காட்டப்பட்டுள்ள காட்சி பின்வருவனவற்றுள் எந்த நாடகத்திற்குரியதாக இருக்கலாம்?




(1) அரிச்சந்திர மயானகாண்டம்
(2) பூதத்தம்பி
(3) இராவணேசன்
(4) காத்தவராயன்

**39.** படத்திற் காட்டப்பட்டுள்ள இசைக்கருவி



(1) தபேலா
(2) மத்தளம்
(3) பறை
(4) உடுக்கு

**40.** படத்திற் காட்டப்பட்டுள்ள ஒப்பனை எவ்வகை நாடகத்திற்குரியதாகலாம்?



(1) வரலாற்று நாடகம்
(2) சிறுவர் நாடகம்
(3) இசைநாடகம்
(4) அரசியல் நாடகம்

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (සා.පෙළ) විභාගය / க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

විෂය අංකය / பாட இலக்கம்: **51**

විෂයය / பாடம்: **நாடகமும் அரங்கியலும்**

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය /பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 3 | 21. | 2 | 31. | 4 |
| 02. | 2 | 12. | 1 | 22. | 1 | 32. | 4 |
| 03. | 4 | 13. | 2 | 23. | 3 | 33. | 2 |
| 04. | 1 | 14. | 1 | 24. | 4 | 34. | 3 |
| 05. | 2 | 15. | 2 | 25. | 2 | 35. | 1 |
| 06. | 1 | 16. | 1 | 26. | 3 | 36. | 4 |
| 07. | 3 | 17. | 3 | 27. | 4 | 37. | 3 |
| 08. | 4 | 18. | 1 | 28. | 1 | 38. | 1 |
| 09. | 2 | 19. | 3 | 29. | 4 | 39. | 3 |
| 10. | 2 | 20. | 4 | 30. | 2 | 40. | 2 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40

[முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**51 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)**

**General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)**

| | |
|---|---|
| නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) | **I, II** |
| நாடகமும் அரங்கியலும் (தமிழ்) | **I, II** |
| Drama and Theatre (Tamil) | **I, II** |

## நாடகமும் அரங்கியலும் (தமிழ்) II

※ முதலாம் வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) கட்புலக்கலை ஒன்றின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(ii) பொன்னர் சங்கர் கூத்து பாரம்பரியமாக ஆடப்படும் பிரதேசம் எது? (01 புள்ளி)

(iii) ஒளி விதானிப்பில் பரப்பொளியின் பங்கு யாது? (01 புள்ளி)

(iv) மனித உருவிலான பொம்மைகளைக் கொண்டு இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியை ஆற்றுகையாக நிகழ்த்தும் சடங்கு எது? (01 புள்ளி)

(v) கருத்தூன்றலுக்கு அதிக அழுத்தம் கொடுக்கும் அரங்க விளையாட்டு ஒன்றின் பெயர் தருக. (01 புள்ளி)

(vi) 'பண்புதான் எங்கள் செல்வம்' எனும் நாடகப்பாடல் இடம்பெற்ற நாடகம் எது? (01 புள்ளி)

(vii) சிங்கள கோலம நாட்டார் ஆற்றுகை நிகழ்த்தப்படுவதன் நோக்கம் யாது? (01 புள்ளி)

(viii) 'ஈழத்து இசை நாடக வரலாறு' எனும் அரங்க ஆய்வு நூலின் ஆசிரியர் யார்? (01 புள்ளி)

(ix) நாடகப் பாத்திரம் ஒன்றின் பௌதிகப் பண்புகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

(x) ஊமம், புதிதளித்தல் ஆகிய நடிப்பு நுட்பங்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

2. (i) கூத்து ஒன்றின் ஆற்றுகைப் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூத்துக்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(அ) சிந்துநடைக் கூத்து

(ஆ) வடமோடிக் கூத்து

(இ) தென்பாங்குக் கூத்து

(ஈ) மகிடிக் கூத்து (08 புள்ளிகள்)

3. (i) சடங்குகளில் பொதிந்துள்ள அரங்கப் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) வேட்டைத்திருவிழா, ரட்டயக்கும ஆகிய சடங்குகளின் நிகழ்த்துகை முறைகளை விபரிக்குக. (08 புள்ளிகள்)

4. 'நடிகருக்கு நடிப்பிற்குத் துணையாக நிற்கும் கலைகள் துணைக் கலைகள் எனப்படும்.'

(i) காட்சி விதானிப்பு யதார்த்த, மனோரதிய யதார்த்த விரோத நாடகமோடிகளுக்கேற்ப எவ்வாறு வேறுபடும் என்பதை விளக்குக. (03 புள்ளிகள்)

(ii) நாடகத்தின் தாக்கவன்மைக்கு ஒளியமைப்பின் பயன்பாடுகள் பற்றி விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) வேட உடையின் பயன்பாடுகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்று பற்றி விளக்குக. (05 புள்ளிகள்)

5. பின்வரும் அரங்கத் தொழிற்பாடுகள் பற்றி விளக்குக.

(i) நாடக நெறியாள்கை (04 புள்ளிகள்)

(ii) நாடகத் தயாரிப்பு (04 புள்ளிகள்)

(iii) நாடக நடிப்பு (04 புள்ளிகள்)

6. 'ஆரொடு நோகேன், புதியதொரு வீடு ஆகிய நாடகங்கள் ஈழத்தின் தலைசிறந்த நாடகங்களாகும்.'

(i) மேற்குறித்த நாடகங்களில் ஒவ்வொரு நாடகத்தில் இருந்தும் உபபாத்திரங்கள் இவ்விரண்டு தருக. (02 புள்ளிகள்)

(ii) ஆரொடு நோகேன் நாடகத்தில் இராஜதுரை மற்றும் ஷீலா ஆகிய பாத்திரங்கள் படைக்கப்பட்டிருக்கும் முறைமை பற்றி விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) புதியதொரு வீடு நாடகத்தில் இடம்பெறும் மாயன் பாத்திரத்தின் இயல்புகளை விளக்கி, அப்பாத்திரத்துக்குரிய வேட உடை, ஒப்பனையை எவ்வாறு திட்டமிடுவீர் என்பதனை விபரிக்குக. (06 புள்ளிகள்)

7. (i) அரங்கவெளி என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் அளிக்கைகள் இடம்பெறும் அரங்கவெளிகளைக் குறிப்பிடுக.

(அ) கோலம்

(ஆ) காத்தவராயன் கூத்து

(இ) காமன் கூத்து

(ஈ) சொக்கறி (04 புள்ளிகள்)

(iii) பின்வரும் அரங்கவெளிகளின் கட்டமைப்பை விளக்குக.

(அ) படச்சட்ட அரங்கு

(ஆ) வட்டக்களரி (06 புள்ளிகள்)

※※※

**1.** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) கட்புலக்கலை ஒன்றின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(ii) பொன்னர் சங்கர் கூத்து பாரம்பரியமாக ஆடப்படும் பிரதேசம் எது? (01 புள்ளி)

(iii) ஒளி விதானிப்பில் பரப்பொளியின் பங்கு யாது? (01 புள்ளி)

(iv) மனித உருவிலான பொம்மைகளைக் கொண்டு இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியை ஆற்றுகையாக நிகழ்த்தும் சடங்கு எது? (01 புள்ளி)

(v) கருத்தூன்றலுக்கு அதிக அழுத்தம் கொடுக்கும் அரங்க விளையாட்டு ஒன்றின் பெயர் தருக. (01 புள்ளி)

(vi) 'பண்புதான் எங்கள் செல்வம்' எனும் நாடகப்பாடல் இடம்பெற்ற நாடகம் எது? (01 புள்ளி)

(vii) சிங்கள கோலம நாட்டார் ஆற்றுகை நிகழ்த்தப்படுவதன் நோக்கம் யாது? (01 புள்ளி)

(viii) 'ஈழத்து இசை நாடக வரலாறு' எனும் அரங்க ஆய்வு நூலின் ஆசிரியர் யார்? (01 புள்ளி)

(ix) நாடகப் பாத்திரம் ஒன்றின் பௌதிகப் பண்புகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

(x) ஊமம், புதிதளித்தல் ஆகிய நடிப்பு நுட்பங்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| (i) | சிற்பம், ஓவியம், கட்டடம் மற்றும் பொருத்தமான விடை இருப்பின் புள்ளி வழங்கலாம் | 01 புள்ளி |
| (ii) | மலையகம் | 01 புள்ளி |
| (iii) | மேடைப் பரப்பு முழுவதிலும் உள்ள காட்சிகளையும் பாத்திரங்களையும் தெளிவாகக் காட்டுதல் | 01 புள்ளி |
| (iv) | உடக்குப்பாஸ்க் | 01 புள்ளி |
| (v) | கரடியும் கிராம மக்களும் மற்றும் பொருத்தமான அரங்க விளையாட்டு | 01 புள்ளி |
| (vi) | பொய்க்கால் | 01 புள்ளி |
| (vii) | வேளாண்மை, செழிப்பு, சௌபாக்கியம் | 01 புள்ளி |
| (viii) | காரை.செ.சுந்தரம்பிள்ளை | 01 புள்ளி |
| (ix) | தோற்றம், வயது, பால், உயரம், நிறை | 02 புள்ளிகள் |
| (x) | ஊமம் – வாய்மொழிச் சித்திரிப்பற்ற நடிப்பு (வார்த்தைகளற்ற உடல்வழிச்சித்திரிப்பு) | 01 புள்ளி |
| | புதிதளித்தல் – முன்னாயத்தமின்றிய சித்திரிப்பு | 01 புள்ளி |

(மொத்தம் 12 புள்ளிகள்)

**2.** (i) கூத்து ஒன்றின் ஆற்றுகைப் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூத்துக்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(அ) சிந்துநடைக் கூத்து

(ஆ) வடமோடிக் கூத்து

(இ) தென்பாங்குக் கூத்து

(ஈ) மகிடிக் கூத்து (08 புள்ளிகள்)

(i)
- கூத்துகளுக்கு ஏற்ற வகையில் பாத்திரங்கள் தன்மையிலும் படர்க்கையிலும் தங்களை அறிமுகம் செய்யும்
- ஆடல் பாடல் உரையாடல் மூலமாகக் கதை சொல்லப்படும்.
- எடுத்துரைக்கும் பண்பு காணப்படும்
- அனைத்து அம்சங்களிலும் மோடிமைப் பண்பைக் கொண்டது
- சல்லரியும் தோற்கருவிகளும் இன்றியமையாத இசைக்கருவிகளாகப் பயன்படும்
- சபையோர் கூத்தினை வளர்த்துச் செல்பவர்களாகவும் பின்னணிக் கலைஞர்களாகவும் இருப்பர்
- அரங்க வெளியின் தன்மைக்கு ஏற்ப ஆற்றுகை முறைமை வேறுபட்டிருக்கும்
- ஆற்றுவோருக்கும் பார்ப்போருக்கும் இடையே நெருக்கமான நேரடித்தொடர்பு காணப்படும்
- மரபுவழிப் பண்பு பேணப்படும்
- குழும அரங்காகக் காணப்படும்
- சமூகத் தேவைப்பாட்டிற்காக நிகழ்த்தப்படும்

(பொருத்தமான கூத்தின் ஆற்றுகைப் பண்புகள் நான்கு குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்)

**(04 புள்ளிகள்)**

**(ii) . பின்வரும் கூத்துக்களைப் பற்றிச் சுருக்கமாக விளக்குக.**

அ. சிந்து நடைக் கூத்து

* யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசங்களில் பிரசித்தமானது.
* முத்துமாரி அம்மன் வழிபாட்டோடு தொடர்புபட்டது.
* எளிமையான சிந்து வகைப் பாடல் காணப்படும்.
* துள்ளு நடையில் நிகழ்த்தப்படும்
* காத்தவராயன், சின்னான், ஆரியப்பூமாலை, சிவன், முத்துமாரியம்மன் போன்ற முக்கிய பாத்திரங்கள் காணப்படும்.
* பிரதான இசைக்கருவியாக உடுக்கு பயன்படுத்தப்படும்.
* பெரும்பாலும் படச் சட்ட மேடைகளில் நிகழ்த்தப்படும்.

**(02 புள்ளிகள்)**

ஆ. வடமோடிக் கூத்து

* பெரும்பாலும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணப் பிரதேசங்களில் நிகழ்த்தப்படும்.
* மகாபாரத, இராமாயணக் கதைக் கருக்களை அதிகமாகக் கொண்டு ஆடப்படும்.
* ஆடல்கள் வேகமும் விறுவிறுப்பும் கொண்டவை.
* பாடல்கள் இழுத்துப் பாடாது நறுக்கிப் பாடப்படும்.
* கந்தார்த்தம் என்ற பாடல் மெட்டு அதி முக்கியத்துவமுடையது.
* பாரங்கூடிய கிரீடமுடி, கரப்புடுப்பு பலவும் பயன்படுத்தப்படும்.

**(02 புள்ளிகள்)**

இ. தென்பாங்குக் கூத்து

* மன்னாருக்குரிய தனித்தவமான கூத்து மரபு
* நிறுதிட்டமான ஆடல் மரபுகளைக் கொண்டது.
* பெரும்பாலும் கிறிஸ்தவக் கதைகளுடன் நிகழ்த்தப்படுவது.
* காப்பு, விருத்தமாகப் பாடப்படும்
* டோலக், மிருதங்கம், ஹார்மோனியம் வாத்தியங்களாக அதிகம் பயன்படுத்தப்படும்.

**(02 புள்ளிகள்)**

ஈ. மகிடிக் கூத்து

* பெரும்பாலும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் முல்லைத்தீவு பிரதேசத்தில் ஆடப்படும்.
* மந்திர தந்திர விளையாட்டுடன் தொடர்புபட்டது.
* 03 வகையான மகிடிகள் காணப்படும்.
* திறந்த வெளியை ஆற்றுகையாகக் கொண்டிருக்கும்.
* நகைச் சுவைப் பண்பு மேலோங்கிக் காணப்படும்.
* ஆற்றுவோர் பார்போருக் கிடையே நெருக்கமான தொடர்பு காணப்படும்.

**(02 புள்ளிகள்)**

(ஒவ்வொரு ஆற்றுகை மரபினதும் பண்புகளில் பொருத்தமான இரண்டினைக் குறிப்பிட்டு **விளக்கியிருப்பின்** புள்ளிகள் வழங்கவும்)

**(08 புள்ளிகள்)**

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

3. (i) சடங்குகளில் பொதிந்துள்ள அரங்கப் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
(ii) வேட்டைத்திருவிழா, ரட்டயக்குமா ஆகிய சடங்குகளின் நிகழ்த்துகை முறைகளை விபரிக்குக. (08 புள்ளிகள்)

**(i)**

ஜதிகம், நம்பிக்கை, மீளநிகழ்த்துகை, பாங்குகொள்ளல், மோதுகை, நிகழ்த்திக்காட்டல், பார்ப்போர் உறவு, போலச்செய்தல் பிரச்சினையும் பிரச்சினை தீர்த்தலும், இசைக்கருவிகளின் பயன்பாடு

**இவற்றில் 04ஐ குறிப்பிடுதல் (04புள்ளிகள்)**

**(ii)**

வேட்டைத்திருவிழா நிகழ்த்துகை முறை பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபட்டு காணப்படுகின்றது.
(பரீட்சார்த்திகள் பொருத்தமான விடையெழுதியிருப்பின் அவற்றை கலந்துரையாடி புள்ளிகள் வழங்கலாம்)

மட்டக்களப்பு மண்டூர் கந்தசுவாமி கோவில் திருவிழா முடிந்து 9ஆம் நாள் நிகழ்த்தப்படுகின்றது ஆலயத்தில் காணப்படுகின்ற வில்வமரத்தடியில் மரக்கறிகளைக் கொண்டு உணவு தயாரிக்கப்பெற்று மூன்று பெரிய பாத்திரங்களில் வைத்திருப்பர். பூசை நிகழ்வுகளின் போது கப்புகனார் அம்புவில் எடுத்து ஆடுவார். இறுதியில் அங்கு வைக்கப்பட்டிருக்கும் சோற்றில் மூன்று முறை அம்பால் எய்வார். அதன் பின்னர் அனைவருக்கும் உணவு பகிர்ந்து கொடுக்கப்படும்.

**ஈழத்து வடபகுதியில்**

முருகன் கோவிலில் முருகன் காட்டிற்கு அன்றேல் வேறு ஆலயத்திற்குச் சென்று வள்ளியைக் கவர்ந்து வருவார் சிவன் கோவிலில் சிவன் வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காகச் வேட்டைக்கு செல்லுவார் ஊரே கூடி சடங்கு செயற்பாடுகளில் ஈடுபடும். கதவடித்துப் பாடுதல் என்ற நிகழ்வு சிறப்பிற்குரியது. ஆலயமும் ஊர்வீதிகளும் ஆற்றுகை வெளியாக அமையும்.

**(04 புள்ளிகள்)**

**ரட்டயக்கும**

* சிங்கள மக்களால் மேற்கொள்ளப்படும் சடங்கு. ஏழுமலட்டு ராணிகளின் கதை செய்து காட்டப்படும். இந்நிகழ்வில் களுகுமார எனும் பிசாசின் உருவத்திற்கு படையல் செய்தல் துதிப்பாடல் மூலம் பிசாசுகள் வரவழைக்கப்படுதல். மத்தள வாத்தியத்திற்கு ஏற்ப பிசாசுகள் ஆடுதல் தீயிலிருந்து பிசாசு தப்பித்து வருதல் நீராடற் செயற்பாடுகள், துணி நெய்தல், பாய் இழைத்தல், குழந்தை பெறுதல் என்பன ஊமத்தில் நிகழ்த்தப்படுகின்றன.
* ரட்டயக்கும பற்றி வேறும் கதைகள் உள்ளன. அதைப் பற்றியும் அறிந்து விடைகளைப் பரிசீலிக்குக. **(04 புள்ளிகள்)**

**(08 புள்ளிகள்)**

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

4. நடிகருக்கு நடிப்பதற்குத் துணையாக நிற்கும் கலைகள் துணைக் கலைகள் எனப்படும்.
   (i) காட்சி விதானிப்பு யதார்த்த, மனோரதிய, யதார்த்த விரோத நாடகமோடிகளுக்கேற்ப எவ்வாறு வேறுபடும் என்பதை விளக்குக. (03 புள்ளிகள்)
   (ii) நாடகத்தின் தாக்கவன்மைக்கு ஒளியமைப்பின் பயன்பாடுகள் பற்றி விளக்குக. (04 புள்ளிகள்)
   (iii) வேட உடையின் பயன்பாடுகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்று பற்றி விளக்குக. (05 புள்ளிகள்)

**(i)**
* நாடகக் கதையின் சூழலை அரங்கில் படைத்துத் தருவது காட்சி விதானிப்பு எனப்படும்
* நாடகக் கதையின் பின்னணிக் களத்தினைப் புலப்படுத்துவது காட்சி விதானிப்பு
* யதார்த்தம்:- நடைமுறை வாழ்வியல் மற்றும் யதார்த்த வாழ்க்கைப் பண்புகளை பிரதிபலிக்கும் வகையில் விதானிக்கப்பெறுவது **(01 புள்ளி)**
* மனோரதியம்:- பகட்டான மற்றும் மனதை வசீகரிக்கும தன்மைகொண்ட வகையில் விதானிக்கப்பெறுவது.(காட்சிகள் சோடனைகள் காட்சித் திரைகள்) **(01 புள்ளி)**
* யதார்த்த விரோத நாடகமோடி:- படிமம் மற்றும் கற்பனை சார்ந்த அன்றேல் குறியீட்டுத்தன்மை கொண்ட வகையிலோ விதானிப்பு இடம்பெறும்

**(01 புள்ளி)**

**(மேலும் பொருத்தமான விடைகள் இருப்பின் கலந்துரையாடிப் புள்ளி வழங்கலாம்)**

**(03 புள்ளிகள்)**

**(ii)**
- நாடகத்தின் காலம் மற்றும் சூழலை பார்ப்போனுக்குப் புலப்படுத்தும்
- காட்சிகளின் மனநிலை / பாத்திர மனநிலையை வெளிப்படுத்தும்
- நாடகத்தின் பிரதான காட்சி / பாத்திரம் / மேடைவெளியை முனைப்புறுதிக் காட்ட உதவும்
- காட்சியையும் பாத்திரங்களின் வெளிப்பாடுகளையும் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவும்

இரண்டு பயன்பாடுகள் குறிப்பிடப்பட்டிருப்பின் அவற்றுக்கு 02 புள்ளிகளும் அவ்விரண்டினையும் சுருக்கமாக விளக்கியிருப்பின் மேலும் 02 புள்ளிகளுமாக மொத்தம் 04 புள்ளிகள் வழங்கலாம் ஒரு பயன்பாடு எழுதப்பட்டு அது தொடர்பாக விளக்கியிருப்பின் 02 புள்ளிகள் வழங்கலாம்.

**(04 புள்ளிகள்)**

**(iii)**
- நாடகக் கதையின் காலத்தை வெளிப்படுத்தும்
- நாடக வகை மற்றும் மோடியை வெளிப்படுத்தும்
- நாடகக்கதை தொடர்பான பண்பாட்டினை இனங்காட்டும்
- பாத்திரப் பண்பினை வெளிக்காட்டும்
- பாத்திரத்தின் பால், வயது என்பவற்றைப் புலப்படுத்தும்

பொருத்தமான பயன்பாடுகள் மூன்று குறிப்பிடப்படிட்டிருப்பின் மூன்று புள்ளிகளும் அவற்றுள் ஒன்று பற்றி விளக்கியிருப்பின் 02 புள்ளிகளும் வழங்கலாம். **(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

5. பின்வரும் அரங்கத் தொழிற்பாடுகள் பற்றி விளக்குக.

(i) நாடக நெறியாள்கை (04 புள்ளிகள்)

(ii) நாடகத் தயாரிப்பு (04 புள்ளிகள்)

(iii) நாடக நடிப்பு (04 புள்ளிகள்)

**(i) நாடக நெறியாள்கை**

* கருத்து நிலையிலுள்ள நாடகாசிரியரின் அன்றேல் நெறியாளரின் சிந்தனைக்கு நடிகரை ஊடகமாகக் கொண்டு பார்ப்போர் முன்னிலையில் காட்சி வடிவம் வழங்கும் செயன் முறையே நெறியாள்கை ஆகும்.
* நாடகக் காட்சிக்கு இறுதி அர்த்தத்தை வழங்கும் செயற்பாடாகும்.
* இத்தகைய செயற்பாட்டை மேற்கொள்பவர் நெறியாளர் ஆவார்.
* நாடகத்தில் பல்வேறு கலைகள் சங்கமிப்பதால் அவற்றை ஒழுங்குபடுத்தி இணைப்பாங்கம் செய்யும் செயற்பாடே நெறியாள்கை எனப்படுகிறது.
* நொறியாளரால் மேற்கொள்ளப்படும் இத்தகைய ஒழுங்குபடுத்தல்களும் வடிவமைப்புக்களும் நெறியாள்கை எனப்படுகிறது.
* நாடக எழுத்துருவை அரங்கில் வியாக்கியானம் செய்யும் இத்தகைய நெறியாள்கைச் செயற்பாட்டில் பின்வரும் பணிகள் இடம்பெறும்.
  1. எழுத்துரு தெரிவும் எருத்துரு வாசிப்பும்
  2. எழுத்துருப் பகுப்பாய்வும் திட்டமிடலும்
  3. நடிகர் தெரிவும் நடிபாகமளித்தலும்
  4. ஒத்திகைகளை மேற்கொள்ளல்

பொருத்தமான தொழிற்பாடுகள் எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கலாம். 04 அரங்கத் தொழிற்பாடுகள் எழுதப்பட்டு அவற்றை விளக்கியிருப்பின் 04 புள்ளிகள்

**(04 புள்ளிகள்)**

**(ii) நாடகத் தயாரிப்பு**

* நாடகக் கலைப்படைப்பினை மேடையேற்றுவதற்கான அடிப்படைகளைத் தோற்றுவிப்பதுடன் கலைப் பொறுமானங்களுக்கான சூழல்களைத் திட்டமிடலுடன் கூடிய முகாமைத்துவச் செயற்பாடே நாடகத் தயாரிப்பாகும்.
* நாடகத் தயாரிப்பு இருவகைப்படும்
  1. பயில் முறை நாடகத் தயாரிப்பு
  2. தொழில் முறை நாடகத் தயாரிப்பு
* நாடகத் தயாரிப்பில் பல்வேறு கலைஞர்களின் ஒன்றிணைந்த பங்களிப்பு உள்ளடங்கியிருக்கும்.
* இப் பணியினைப் பொறுப்பேற்று மேற்கொள்பவரை தயாரிப்பாளர் என்பர்.
* இவர் பின்வரும் முறைகளில் தமது தயாரிப்புச் செயற்பாடுகளை மேற்கொள்வார்.
  1. நாடகத் தயாரிப்பைத் திட்டமிடல்
  2. நாடக எழுத்துருவைத் தெரிவு செய்தல்
  3. நெறியாளரைத் தெரிவு செய்தல்
  4. நடிகர்களை ஒழுங்குபடுத்திக் கொடுத்தல்
  5. நிதிக் கையாள்கை
  6. விளம்பரப்படுத்தல்
  7. நுழைவுச் சீட்டுக்களை வழங்குதல்
  8. ஏனைய கலைஞர்களை வழங்குதல்

04 அரங்கத் தொழிற்பாடுகள் எழுதப்பட்டு விளக்கியிருப்பின் 04 புள்ளிகள் வழங்கலாம்

**(04 புள்ளிகள்)**

**(iii) நாடக நடிப்பு**

* நடிப்பு என்பது செய்தல், செய்து காட்டுதல், பாசாங்கு செய்தல், இன்னொரு ஆளாதல் எனப் பலவாறாக அர்த்தப்படும்
* நடிகன் தனது உடல், உள, குரல் ஒத்திசைவின் மூலம் அரங்கில் தொழிற்படுதல் நாடக நடிப்பு எனலாம்
* நடிப்பானது நாடகத்தின் அடிப்படை மூலகங்களுள் ஒன்று
* நடிப்பபே நாடகத்தின் உயிராக விளங்குகிறது
* நடிகனும் அவனது கலையான நடிப்பும் நாடகத்தின் உணர்ச்சி நிலையினை, பாத்திரங்களுக்கூடாக வளர்த்தெடுத்துச் செல்கிறது.
* இத்தகைய நடிப்பு இரு முறைகளில் இடம் பெறலாம்.
  1. இயல்பான நடிப்பு
  2. இயல்புக்கு மாறான நடிப்பு / மோடியுற்ற நடிப்பு

* நடிப்பு என்ற சொல்லுக்குள் ஒருவித பொய்மை ஒழிந்திருக்கும்.

04 அரங்கத் தொழிற்பாடுகள் எழுதப்பட்டு விளக்கியிருப்பின் 04 புள்ளிகள் வழங்கவும்

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

6. ஆரோடு நோகேன், புதியதொரு வீடு ஆகிய நாடகங்கள் ஈழத்தின் தலைசிறந்த நாடகங்களாகும்.
   (i) மேற்குறித்த நாடகங்களில் ஒவ்வொரு நாடகத்தில் இருந்தும் உபபாத்திரங்கள் இவ்விரண்டு தருக. (02 புள்ளிகள்)
   (ii) ஆரோடு நோகேன் நாடகத்தில் இராஜதுரை மற்றும் ஷீலா ஆகிய பாத்திரங்கள் படைக்கப்பட்டிருக்கும் முறைமை பற்றி விளக்குக. (04 புள்ளிகள்)
   (iii) புதியதொரு வீடு நாடகத்தில் இடம்பெறும் மாயன் பாத்திரத்தின் இயல்புகளை விளக்கி, அப்பாத்திரத்துக்குரிய வேட உடை, ஒப்பனையை எவ்வாறு திட்டமிடுவீர் என்பதனை விபரிக்குக. (06 புள்ளிகள்)

**(i)** - ஆரொடு நோகேன் நாடகத்தின் பிரதான பாத்திரங்களான ஷங்கரி, ஷீலா, ரஜீவ், அம்பிகை தவிர்ந்த ஏனைய பாத்திரங்கள் யாவும் உப பாத்திரங்களாவர்.

- புதியதொரு வீடு நாடகத்தில் மாயன், மயிலி தவிர்ந்த ஏனைய பாத்திரங்கள் உப பாத்திரங்களாவர்.

ஒவ்வொரு நாடகத்தில் இருந்தும் இரண்டு உப பாத்திரங்கள் எழுதப்பெற்றிருப்பின்

**(1/2 x 04 = 02 புள்ளிகள்)**

**(ii)** **ஆரொடு நோகேன் நாடகத்தில் இராஜதுரை மற்றும் ஷீலா ஆகிய பாத்திரங்கள் படைக்கப்பட்டிருக்கும் முறைமை பற்றி விளக்குக.**

இங்கு பாத்திரத்தின் வயது மற்றும் உறவுமுறைகளுக்குத் தனியே புள்ளிகள் கிடையாது.

- பாத்திரங்களின் உறவுமுறைகள் மற்றும் பாத்திரப் பண்புகளுக்கு ஊடாக வெளிப்படும் பாத்திர நடத்தைக் கோலங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

எடுத்துக்காட்டாக:

01. இராஜதுரையின் பாத்திரப் படைப்பு
- பிள்ளைகளின் சுதந்திரமான செயற்பாட்டிற்கு இடமளிப்பவராக இருக்கிறார்.
- கட்டிளமைப் பருவத்தினருடன் தோழமையுடன் பழகுபவராக இருக்கிறார்.
- அமைதியாக விடயங்களைக் கையாளுகிறார்.
- தமது பிள்ளைகள் தமது பேச்சிற்கு மதிப்பளிக்கும் விதத்தில் நடந்துகொள்கிறார்.

02. ஷீலாவின் பாத்திரப் படைப்பு
- பாடத்தெரிவு தொடர்பில் தனது சுதந்திரமான எண்ணங்களுக்கும் தனது தந்தை ராஜ்குமாரின் அதிகார நிலைப்பட்ட சிந்தனைக்கும் இடையில் நின்று அல்லாடுகிறவளாகப் படைக்கப்பட்டிருக்கிறாள்.
- தனது தந்தைக்கு மிகவும் அஞ்சுகிறாள்.
- தனது விருப்பங்களைத் தந்தையிடம் வெளிப்படுத்த இயலாதவளாக இருக்கிறாள்.
- தாயின் பக்கத்துணையால் ஆறுதல் பெறுகிறாள்.

ஒவ்வொரு பாத்திரங்களினதும் பாத்திரப் படைப்பு இரண்டு வீதம் தரப்பட்டிருக்குமிடத்து

**(04 புள்ளிகள்)**

**(iii)**

- யாழ்ப்பாணத்துக் கடற்கரையோரம் வாழும் சாதாரண மீனவன்
- மனைவி மயிலி, மகன் மன்னவன் மற்றும் அக்கறையுள்ள சுற்றம் என வாழ்ந்து வந்தவன்.
- சாதாரண மானிடத் துயருக்கு அப்பாற்பட்ட துயரத்தைச் சந்திப்பவன்.
- எத்தகைய துயர் வந்த போதிலும் அதனைக் கடந்து செல்லும் மன ஓர்மத்தைக் கொண்டிருக்கிறான்.
- இயற்கையுடன் போராடித் தனது குடும்பத்தின் மீதுள்ள அன்பினதும் பற்றினதும் காரணமாகத் தனது சொந்த ஊருக்குத் திரும்பி வருகிறான்.
- தனது மனைவியும் தம்பியும் வாழும் வாழ்க்கையைக் குழப்ப மனமில்லாது தனது மகனுடன் தனித்துச் செல்லும் முடிவிற்கு வருகிறான்.

மேற்குறிப்பிட்ட மாயனின் பாத்திர இயல்புகளில் யாதாயினும் இரண்டைக் குறிப்பிட்டு விளக்கியிருத்தல் வேண்டும். அதற்கு 02 புள்ளிகள் வழங்கலாம்.

**(02 புள்ளிகள்)**

www.e-kalvi.com

வேறு பொருத்தமான விடைகளையும் பரிசீலிக்குக.

மாயனின் வேடஉடை

மாயன் மீனவன் என்பதால் சாரம் மற்றும் பெனியன் அன்றேல் சேர்ட் அணியலாம்.

(02 புள்ளிகள்)

மாயனின் ஒப்பனை

மாயன் தாடி வைத்திருக்கலாம். சதா கடலுடன் போராடும் மீனவன் என்பதால் உடலில் கரடுமுரனான தோற்றம் வரும் வகையில் ஒப்பனை செய்யப்படலாம். தலை கலைந்திருக்கலாம்.

(02 புள்ளிகள்)

(06புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

7. (i) அரங்கவெளி என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் அளிக்கைகள் இடம்பெறும் அரங்கவெளிகளைக் குறிப்பிடுக.

(அ) கோலம்

(ஆ) காத்தவராயன் கூத்து

(இ) காமன் கூத்து

(ஈ) சொக்கரி (04 புள்ளிகள்)

(iii) பின்வரும் அரங்கவெளிகளின் கட்டமைப்பை விளக்குக.

(அ) படச்சட்ட அரங்கு

(ஆ) வட்டக்களரி (06 புள்ளிகள்)

(i). ஆற்றுவோரும் பார்ப்போரும் உணர்வு ரீதியாகச் சங்கமிக்கும் வெளி அரங்க வெளி ஆகும். நாடக நிகழ்வு கட்புலனாக முகிழ்ந்தெழும் இடம் அரங்கவெளி/. பார்ப்போர் பார்ப்பதற்குத் தயாராகும் வெளி அரங்கவெளி

(02புள்ளிகள்)

(ii). பின்வரும் அளிக்கைகள் இடம்பெறும் அரங்க வெளிகளைக் குறிப்பிடுக?

| | | | |
|---|---|---|---|
| அ. கோலம் | - | தாளையம்பல (வாடிவீட்டு முற்றம்) | (01 புள்ளி) |
| ஆ. காத்தவராயன் கூத்து | - | படச்சட்ட அரங்கு | (01 புள்ளி) |
| இ. காமன் கூத்து | - | காமன்பொட்டல் | (01 புள்ளி) |
| ஈ. சொக்கரி | - | களத்துமேடு | (01 புள்ளி) |

(04புள்ளிகள்)

(iii) பின்வரும் அரங்க வெளிகளின் கட்டமைப்பை விளக்குக?

அ. மூன்று பக்கம் அடைக்கப்பட்டு ஒருபக்கப் பார்வையாளர்களைக்கொண்ட அரங்கு.

(விளக்கத்திற்கு 02 புள்ளிகளும் படம்கீறி விளக்கியிருப்பின் 03 புள்ளிகளும் வழங்கலாம்)

ஆ. 30 அன்றேல் 40 அடி விட்டமுடையது. 03அடிக்குமேல் உயர்த்தப்பட்டிருக்கும். 8/12 கம்புகள் நடப்பட்டு சேலைகள் கொய்து கட்டப்படும். சுற்றிவர வாழைக்குற்றி நடப்பட்டடு தேங்காய்ப்பாதி விளக்கில் ஒளி பாய்ச்சப்படும்.

(விளக்கத்திற்கு 02 புள்ளிகளும் படங்கீறி விளக்கியிருப்பின் முழுப்புள்ளி வழங்கலாம்)

(06புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

www.e-kalvi.com